தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விலை ரூ. 15/– மலர் 19 - இதழ் 11 – மார்ச் 2018 | Price : Rs. 15/- Vol : 19 - Issue : 11 - March 2018
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ DEPARTMENT

உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா

சர்வதேச மகளிர் தின விழாக் கொண்டாட்டம்

அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா

சேலம் மாவட்டத்தில் 12.03,2018 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கலந்து கொண்டு, உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சேலம் மாவட்ட ஆட்சியர் திருமதி. ரோஹிணி ரா. பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கோயமுத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 10.03.2018 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் கோயமுத்தூர் மாவட்ட ஆட்சியர் திரு. ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற, உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் கலந்து கொண்டு, 145 பயனாளிகளுக்கு மானிய விலையிலான அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

உள்ளே...

வெள்ளரி இட்லி 25

'வேளாண்மையில் மகளிர்' கருத்தரங்கம் மற்றும் மாடித் தோட்டம் துவக்க விழா 07

மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா 05

தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள மாடித் தோட்டம் பார்வையிடல் 21

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் 15

கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு கடன் வழங்குதல் 31

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 27

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளையும், பெண்களுக்கு பயனுள்ள பல்வேறு செய்திகளையும் மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழ் சுய உதவிக் குழு மகளிரின் தோழியாக என்றும் திகழ்கிறது. முற்றம் மேலும் மேலும் வளர எங்களின் வாழ்த்துகள்.

ஆர். தங்கரோஜா (ஊக்குனர்),
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்

தனிநபர் இல்லக் கழிப்பறைகளின் முக்கியத்துவம் மற்றும் திறந்தவெளி மலம் கழித்தலின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட செயல்பட்டு வரும் 'முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்' என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்த செய்திகள் முற்றம் இதழில் சிறப்பாக இடம் பெறுகின்றன.

திருமதி. கோமதி ரவிச்சந்திரன்,
விநாயகா மகளிர் சுய உதவிக் குழு,
மேட்டுத் தெரு, சேலம் நகரம்.

கிராமப்புற மக்களின் வாழ்வில் ஏற்றத்தை உருவாக்கி கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த செய்திகளும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த கட்டுரைகளும் நன்றாகவும், எங்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் இருக்கிறது.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
முட்டம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு,
முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை செழிப்பாக்கும் வகையில் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டு வரும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் குறித்த கட்டுரைகள் முற்றம் இதழில் வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
வெண்சங்கு சுய உதவிக் குழு,
மாமல்லபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்

மலர் 19 – இதழ் 11 – மார்ச் 2018 விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்
திரு. **கா. பாஸ்கரன்,** இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநகரகம்,
முதன்மை செயல் அலுவலர் (பொ),
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்கள்
எஸ். அமிர்த ஜோதி, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,

எஸ். ஜானகி,
டி.ஆர்.ஓ. / பொது மேலாளர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி
கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. கே. வீரணன்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பொறுப்பாசிரியர்
சு. மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

வெறுக்கும் வெயில்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

காட்டுத் தீயைப் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றோம், படித்திருக்கின்றோம். சமீபத்தில் தேனி மாவட்டத்தில் குரங்கணி மலைப் பகுதியில் உள்ள காடுகள் தீப்பிடித்து எரிந்ததும், அதில் மலை ஏறும் பயிற்சிக்குச் சென்றவர்கள் சிலர் சிக்கி இறந்த செய்தியையும் அறிந்திருப்போம். அவ்வப்போது காடுகள் தீப்பிடித்து எரிவது வழக்கம்தான். காடுகளில் மூங்கில் மரங்கள் உரசிக் கொள்வதால் தீப்பிடிக்கும். அதோடு மனிதர்கள் நெருப்பை எச்சரிக்கையுடன் கையாளாததினாலும் காடுகள் தீப்பிடித்து எரியும். இவ்வாறு காடுகள் எரியும் போது, குறிப்பாக மலைப் பகுதிகளில் எரியும் காட்டுத் தீயை கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். மலை ஏறும் பயிற்சி பெறுபவர்கள் பருவ நிலையைக் கணக்கில் கொண்டும் எச்சரிக்கையுடன் பயிற்சிக்குச் செல்ல வேண்டும்.

பெரும்பாலும் குளிர் காலங்களில் காடுகளில் தீப்பிடிப்பதில்லை. வெயில் காலங்களில் தீப்பிடிக்க அதிகமான வாய்ப்புகள் உண்டு. எதிர்வரும் கோடை வெயிலை நினைத்தாலே பயம் ஏற்படுகிறது. ஆனாலும் வெயிலை நாம் வெறுத்து ஒதுக்கி விட முடியாது. இந்த உலகில் உயிர்கள் வாழ்வதற்குத் தேவையான உணவை கொடுக்கும் விளை பொருட்கள் விளைவதற்கு வெயில் மிகவும் அவசியம். தண்ணீரில் உள்ள நோய் பரப்பும் கிருமிகளை கொல்வதற்கு வெயில் மிகவும் பயன்படுகிறது. மனிதர்களிடம் மிகுதியாக உள்ள கொழுப்புச் சக்தியை எரித்து, சுறுசுறுப்பாக வேலை செய்வதற்கு வெயிலானது பயன்படுகிறது. பல்வேறு வழிகளில் பன்மடங்கு பலன்களை வாரி வழங்கும் பழங்கள், காய்கள், பூக்கள், நிழல் போன்றவற்றை தரும் மரங்களுக்கும் வெயில் மிகவும் தேவைப்படுகிறது.

மனிதர்களுக்குத் தேவையான 'டி' விட்டமின் சக்தியை அபரிமிதமாக கொடுப்பதும் வெயில்தான். ஆனால் கடும் வெயிலில் தொடர்ந்து வேலை செய்வதால் இந்த 'டி' விட்டமின் சக்தி கிடைத்து விடாது. காலை வெயிலும் மாலை வெயிலும் நமது உடலில் படும்போதுதான் போதுமான சக்தி மிக்க 'டி' விட்டமின் கிடைக்கிறது. வெயிலை சரியாகப் பயன்படுத்தி இயற்கையை அழிக்காமல் மின்சக்தியை உற்பத்தி செய்வதன் மூலம், மின்சாரத்தை பெற்று பயனடைவதோடு, உயிர்ச் சூழலையும் பாதுகாக்க வழிவகுக்கிறது. எனவே வெயிலை வெறுத்து ஒதுக்காமல், அதை எவ்வாறு பயனுள்ளதாக மாற்ற வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா

மகளிரின் முன்னேற்றத்தில் அளவற்ற அக்கறை கொண்ட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிரின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டு, பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை செயல்படுத்தி வந்தார்கள். மேலும் பெண்கள் தங்களது பணியிடங்களுக்கு செல்வதில் உள்ள சிரமங்களை உணர்ந்து, இந்தியத் திருநாட்டிலேயே முதன்முறையாக 'மகளிர் தங்களது பணியிடங்களுக்கு எளிதில் செல்லும் வகையில், 50 சதவீத மானியத்தில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும்' உன்னதத் திட்டத்தினை தேர்தல் வாக்குறுதியாக அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், பதவியேற்றவுடன் 'மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தினை' செயல்படுத்திடும் கோப்பில் முதல் கையெழுத்திட்டு, ஆண்டிற்கு ஒரு இலட்சம் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், உழைக்கும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றிட, சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி, இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட ஆலோசனைகளை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 3,36,103 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி அம்மா இருசக்கர வாகனம் மானியம் பெறுவதற்கு உரிய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

'உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா' புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 70வது பிறந்த தினமான 24.02.2018 அன்று, சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் கலந்து கொண்டு, உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி, இத்திட்டத்தினை துவக்கி வைத்ததுடன், தமிழ்நாட்டில் 70 இலட்சம் மரக் கன்றுகளை நடும் திட்டத்தையும் துவக்கி வைத்து மரக் கன்றுகளை நட்டு விழாப் பேருரையாற்றினார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்கள், மாண்புமிகு மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் திரு. பொன். இராதாகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் மு. தம்பித்துரை அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தனது உரையில், 'தமிழ் மண்ணுக்கும், மொழிக்கும், பாரம்பரியத்துக்கும், மக்களுக்கும் தலைவணங்குகிறேன். 'எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி' என்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியின் மண்ணிலே நிற்பதற்குப் பெருமைப்படுகிறேன்' என்று தமிழில் கூறி தனது பேச்சைத் தொடங்கினார்.

தொடர்ந்து அவர் பேசும் போது, 'உங்கள் முகத்தில் இருக்கும் சந்தோஷத்தைப் பார்க்கும் போது, நிச்சயம் ஜெயலலிதா சந்தோஷப்படுவார் என்று எண்ணுகிறேன் பெண்களின் முன்னேற்றம், இயற்கைப் பாதுகாப்புக்காக இந்த இரு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

ஒரு பெண் முன்னேறினால் அவரது வீடு முன்னேறும். ஒரு பெண்ணின் கல்விக்கு உதவினால் அவரது குடும்பம் கல்வி பெறும். அதேபோல், ஒரு பெண்ணை ஆரோக்கியமாகப் பார்த்துக் கொண்டால், அது அந்தப் பெண்ணின் குடும்பத்தையே நலமுடன் காப்பதற்கு உதவும். அப்பெண்ணின் எதிர்காலத்தைப் பாதுகாத்தால், அந்த வீட்டின் எதிர்காலமும் பாதுகாக்கப்படும்' என்று குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமை வகித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, 'ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன், 8 கிராம் தங்கம் வழங்கும் திட்டம்; முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டம்; இலவச அரிசி வழங்கும் திட்டம்; இலவச ஆடு, மாடுகள் வழங்கும் திட்டம்; அம்மா உணவகம்; அம்மா குடிநீர்; அம்மா உப்பு; அம்மா சிமெண்ட் என எண்ணற்ற நலத் திட்டங்களை வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், மகளிரின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டு, பல்வேறு தொலை

நோக்குத் திட்டங்களை செயல்படுத்துவதை பார்த்து நாடே பாராட்டுகிறது' என்று குறிப்பிட்டார்.

விழாவில் வரவேற்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தனது உரையில், 'மாண்புமிகு பிரதமர் அவர்கள் துவக்கி வைக்கும், 'மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்' மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

முன்னதாக தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். விழாவின் நிறைவாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறைவு பெற்றது. ■

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'வேளாண்மையில் மகளிர்' என்ற கருத்தரங்கம் மற்றும் மாடித் தோட்டம் துவக்க விழா

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக 08.03.2018 அன்று சென்னை, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற 'வேளாண்மையில் மகளிர்' என்ற கருத்தரங்கையும், அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் மேற்பரப்பில் சுய உதவிக் குழுக்களால் அமைக்கப்பட்டுள்ள மாடித் தோட்டத்தையும், மாண்புமிகு மீன் வளத்துறை, பணியாளர் நிர்வாகம் மற்றும் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களின் முன்னிலையில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் இந்த நிகழ்ச்சியில் திட்ட விளக்கவுரையாற்றினார். முன்னதாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத் தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், திருமதி. மீனாட்சி இராஜகோபால், இ.ஆ.ப., அவர்கள், மாநில திட்டக் குழு முன்னாள் துணைத்தலைவர் திருமதி. பி. சாந்தாஷீலா நாயர், இ.ஆ.ப., (ப.நி.) அவர்கள், தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. சத்யநாராயணன் அவர்கள், விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. என். ரவி அவர்கள், முனைவர் சி. இராமசாமி அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் மாண்புமிகு மீன் வளத்துறை, பணியாளர் நிர்வாகம் மற்றும் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களின் முன்னிலையில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், 'வேளாண்மையில் மகளிர்' என்ற கருத்தரங்கையும், அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் மேற்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள மாடித் தோட்டத்தையும் துவக்கி வைத்ததுடன், விவசாய குழு உறுப்பினர்களான பத்து நபர்களுக்கு சுழல் நிதியாக தலா ரூ. 10 ஆயிரம் வீதம் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'பெண்களின் முன்னேற்றத்திலும், மேம்பாட்டிலும் பெரிதும் அக்கறை கொண்டு, அவர்களுக்காகப் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்களை வலிமைப்படுத்தவும், ஏழைப் பெண்களின் வறுமையை ஒழித்திடவும் உருவாக்கிய மகளிர் சுய உதவிக் குழு என்ற மகத்தான இயக்கம் இன்றைக்கு ஆலமர விருட்சமாய், குன்றிலிட்ட விளக்காய், உலகம் போற்றும் அமைப்பாய் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு முழுவதும் 6.30 இலட்சம் சுய உதவிக் குழுக்கள், 95.02 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களின் மொத்த சேமிப்பு ரூ. 6,839 கோடி ஆகும். சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலமாக இதுவரை ரூபாய் 44,452 கோடி வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 6,000 கோடி அளவில் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2017-18ஆம் நிதியாண்டில், புதிய சாதனையாக பிப்ரவரி மாதம் வரை வழங்கப்பட்ட வங்கிக் கடன் ரூ. 7,000 கோடியை தாண்டி உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீட்டிய திட்டங்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தையில் உதித்த உன்னதத் திட்டமான உழைக்கும் மகளிர் தங்களின் பணியிடங்களுக்கு விரைவாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் சென்று வர, 'உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டத்தை' மாண்புமிகு அம்மா அவர்களின் 70வது பிறந்த நாளான 24.02.2018 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் துவக்கி வைத்து, இத்திட்டத்தினை வெகுவாகப் பாராட்டினார்கள்.

சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம்...

சர்வதேச மகளிர் தினம் கொண்டாடும் இந்த இனிய வேளையில், விவசாயத்தில் பெண்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 10 வட்டாரங்களில் பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் 2016-17ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. 116 ஊராட்சிகளில், 16,800 பெண் விவசாயிகள் கண்டறியப்பட்டு, அவர்களில் 14,800 நபர்களுக்கு வேளாண்மைத் துறையில் புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும், விவசாயத்தில் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. 3 ஆண்டுகள் நடைமுறையில் உள்ள இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ. 15.96 கோடி ஆகும்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டும், நகர்ப்புறங்களிலும் காய்கறி, கீரை போன்றவற்றை உற்பத்தி செய்ய இயலும் என்பதை நிரூபிக்கவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் இருக்கும் வண்ணம், மிகப் பெரிய மாடித் தோட்டத்தை அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் மேற்பரப்பில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அமைத்துள்ளது. இது அனைவரின் பாராட்டையும் பெற்று, மாடித் தோட்டம் அமைக்க அனைவருக்கும் ஓர் உந்து சக்தியாக திகழ்கிறது. 120 பெண்களுக்கு மாடித் தோட்டம் அமைத்தல் குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டு, முதன்மை பெண் பயிற்றுநர்களாக அவர்கள் மாநில / மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றனர். தூத்துக்குடி மாவட்ட ஆணையர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றின் மேற்பரப்பிலும் மாடித் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மாநில அளவிலான மாடித் தோட்டம் அமைத்தல் பயிற்சி மையமாகவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் / ஆணையர் அலுவலகம் போன்றவை மாவட்ட அளவிலான பயிற்சி மையங்களாகவும் செயல்படும். விரைவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாடித் தோட்டம் அமைப்பதை வணிக ரீதியாக செயல்படுத்தி வருவாய் ஈட்ட வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கிறேன்.

சர்வதேச மகளிர் தின விழாவில் பங்கேற்று, தமிழ்நாடு அரசின் பல்வேறு சாதனைகளை உங்கள் முன் தெரிவித்ததில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். சர்வதேச மகளிர் தின விழாவினை முன்னிட்டு உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டார். ■

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை விருப்பக் கண்காட்சி

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் 18.02.2018 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் தூய்மை பாரத இயக்கப் பணிகளை பார்வையிட்டதுடன், அனைத்துத் துறையினரால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளையும் ஆய்வு செய்தார். மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநரின் வருகையை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை அரங்கு நாகப்பட்டினம் பேருந்து நிலையம் அருகில் உள்ள அவுரித் திடலில் அமைக்கப்பட்டிருந்தது

இந்த அரங்கினை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் திரு. ஓ. எஸ். மணியன் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் முனைவர் சீ. சுரேஷ்குமார், இ.ஆ.ப., ஆகியோர் பார்வையிட்டனர். அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்கள் குறித்த விபரங்களை நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. மதுமதி அவர்கள் மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் விளக்கிக் கூறினார். மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சுய உதவிக் குழுக்களைப் பாராட்டியதுடன், கலைப் பொருட்களையும் வாங்கினார். ■

பாராளுமன்ற நிலைக்குழு வருகைக்கான விருப்பக் கண்காட்சி

பாராளுமன்ற நிலைக்குழுவின் உறுப்பினர்கள் மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்திருந்ததை முன்னிட்டு, 22.01.2018 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நாகமலை புதுக்கோட்டை ஊராட்சியிலும் மற்றும் செயல்முறை கண்காட்சி மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், சத்திரப்பட்டி ஊராட்சியிலும் நடத்தப்பட்டது.

மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியில் அலங்கார நகைகள், களிமண் பொம்மைகள், மரப் பொருட்கள், சணல் பொருட்கள், அகர்பத்தி, பினாயில் மற்றும் பிளீச்சிங் பவுடர் ஆகியவை விற்பனை செய்யப்பட்டன. மேலும், செயல்முறை கண்காட்சியில் மேற்கண்ட பொருட்களின் தயாரிப்பு முறையும் கண்காட்சி யாக வைக்கப்பட்டிருந்தன.

பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள், கூடுதல் இயக்குநர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கண்காட்சி அரங்கினையும், செயல்முறை அரங்கினையும் பார்வையிட்டு, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் செயல் திறனைப் பாராட்டியதுடன் சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களையும் வாங்கிச் சென்றனர். ■

விருப்பக் கண்காட்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி, தேனி மாவட்டம், தேவதானப்பட்டி மூங்கிலணை காமாட்சியம்மன் கோவில் திருவிழா வினை முன்னிட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்கள் விற்பனை விருப்பக் கண்காட்சி மூங்கிலணை காமாட்சியம்மன் கோவில் வளாகத்தில் 13.02.2018 முதல் 20.02.2018 வரை நடைபெற்றது. தேனி மாவட்ட மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திரு. மு. கல்யாணசுந்தரம் அவர்களின் முன்னிலையில், தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் இக்கண்காட்சியினைத் துவக்கி வைத்தார்.

இக்கண்காட்சியில் தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 20 மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தனர். ■

உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா

பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டிய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான 'உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்க வாகனம் வழங்கும்" திட்டம், 24.02.2018 அன்று சென்னையில் துவக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் 10.03.2018 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா, நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் கலந்து கொண்டு, 154 பயனாளிகளுக்கு மானிய விலையிலான அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. முருகேசன் அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜெயராமன் அவர்கள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில் 12.03.2018 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின் அவர்களும், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன் அவர்களும் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு அரசு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள்.

இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. ஏ. சுந்தரவள்ளி, இ.ஆ.ப., அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. கிருஷ்ணம்மாள் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பிற துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருவாரூர் மாவட்டம்

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் திரு. நிர்மல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ் அவர்கள் கலந்து கொண்டு, 100 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். இவ்விழாவில் திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. தெய்வநாயகி அவர்கள், மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. இராஜமோகன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் 04.03.2018 அன்று உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி. எம். ராஜலட்சுமி அவர்கள் கலந்து கொண்டு 100 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள்.

இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஆ. பழனி அவர்கள், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர் திருமதி. த. கெட்சி லீமா அமலினி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ■

தர்மபுரி மாவட்டம்

தர்மபுரி மாவட்டத்தில் 04.03.2018 அன்று உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா தர்மபுரி மாவட்ட ஆட்சியர் திருமதி. எஸ். மலர்விழி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன் அவர்கள் கலந்து கொண்டு 100 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர் அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் திரு. ராமமூர்த்தி அவர்கள், தர்மபுரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ■

திருவண்ணாமலை மாவட்டம்

உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சுப்ரமணியர் சாஸ்திரியார் மேல்நிலைப்பள்ளியில் 03.03.2018 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு 100 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார். இவ்விழாவில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர், செய்யார் சட்டமன்ற உறுப்பினர், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்கள் திட்ட விளக்கவுரை ஆற்றினார். ■

திருப்பூர் மாவட்டம்

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 04.03.2018 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழாவில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள்.

இவ்விழாவில் திருப்பூர் தெற்கு, பல்லடம் மற்றும் காங்கேயம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் உறுப்பினர்கள், திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ச. பிரசன்னா ராமசாமி அவர்கள், திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. மைக்கேல் ஆண்டனி பெர்னாண்டோ அவர்கள், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு. லியாகத் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 04.03.2018 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. என். வெங்கடேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் கலந்து கொண்டு, 100 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்.

முன்னதாக தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ரேவதி அவர்கள் வரவேற்புரையாற்றினார். கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி. பி. அனிதா அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஆல்பிஜான் வர்க்கீஸ் அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

மதுரை மாவட்டம்

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் 05.03.2018 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநகராட்சி ஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழாவில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்கள் கலந்து கொண்டு, 102 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்.

இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ■

விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. அ. சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. டி. ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. கே. டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்.

இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், விருதுநகர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. இரா. தெய்வேந்திரன் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ■

கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய்த் துறை கூட்ட அரங்கில் 06.03.2018 அன்று உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா நடைபெற்றது. மாநிலங்களவை உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள் தலைமையில், நகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுரேஷ்ராஜன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் 100 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் சு. சுரேஷ் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. மாடசாமி சுந்தர்ராஜ் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ■

நாமக்கல் மாவட்டம்

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 03.03.2018 அன்று நடைபெற்ற உழைக்கும் மகளிருக்குமானியவிலையில்அம்மா இருசக்கரவாகனங்கள்வழங்கும்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்களும், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் மருத்துவர் வே. சரோஜா அவர்களும் கலந்து கொண்டு, 128 பயனாளிகளுக்கு மானிய விலையிலான அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். முன்னதாக நாமக்கல் மாவட்ட மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர் இரா. மணி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். ■

வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்டத்தில் 03.03.2018 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழாவில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திருமதி. நீலோபர் கபில் அவர்களும் கலந்து கொண்டு, 100 பெண்களுக்கு அரசு மானியத்துடன்கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். முன்னதாக வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பிற துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

அரியலூர் மாவட்டம்

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழாவில், அரசு தலைமை கொறடா திரு. தாமரை எஸ். ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு, 102 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரியலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. அ. லலிதா அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சே. தனசேகரன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ■

பெரம்பலூர் மாவட்டம்

பெரம்பலூர் மாவட்டத்தில் 01.03.2018 அன்று உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா நடைபெற்றது. பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மருதராஜா, சிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சந்திரகாசி, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. இளம்பை தமிழ்செல்வன் மற்றும் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.டி.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள், 100 பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். இவ்விழாவில் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர் அவர்கள், மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு. தேவநாதன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ■

இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலை வாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகின்றன. இந்த முகாம்களின் மூலம் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றன.

விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 31.01.2018 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் சென்னை, காஞ்சிபுரம், கோவை, திருப்பூர், நாகர்கோவில், மதுரை, விருதுநகர், திருச்சி, தூத்துக்குடி, பெரம்பலூர், ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த 37 தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன. வேலை வேண்டி கலந்து கொண்ட 4450 இளைஞர்களில் 211 நபர்கள் பல்வேறு பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. அ. சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் திரு. கே. டி. இராஜேந்திர பாலாஜி அவர்கள் கலந்து கொண்டு, இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் விருதுநகர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. இரா. தெய்வேந்திரன் அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், களப்பகுதி வழிநடத்துநர்கள், சமுதாய அமைப்பாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தேனி மாவட்டம்

தேனி மாவட்டத்தில் 17.02.2018 அன்று கம்பம் அரசு பெண்கள் மேலைநிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் சென்னை, காஞ்சிபுரம், கோவை, திருப்பூர், திருச்சி, சேலம், மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் செயல்படும் 25 தனியார் தொழில் நிறுவனங்களும், வேலைவாய்ப்பு வேண்டி 522 இளைஞர்களும் கலந்து கொண்டனர். இதில் தேர்வு செய்யப்பட்ட 117 இளைஞர்களுக்கு வேலை நியமன ஆணைகளை உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு. து. தங்கவேல் அவர்கள் வழங்கினார்.

தேனி மாவட்ட மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திரு. மு. கல்யாணசுந்தரம் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இம்முகாமிற்கானப் பணிகளை உதவித் திட்ட அலுவலர்கள், அலுவலகப் பணியாளர்கள், களப்பகுதி வழிநடத்துநர்கள் மற்றும் சமுதாய அமைப்பாளர்கள் கலந்து கொண்டு ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொண்டனர். ■

நாகப்பட்டினம் மாவட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம், இ.ஜி.எஸ். பிள்ளை பொறியியல் கல்லூரியில் 18.02.2018 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாம் தொடக்க விழா நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட துணை ஆட்சியர் திரு. தி. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. மதுமதி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. ஜெ. அருணகிரி, திரு. கே. எஸ். சிவக்குமார் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம்முகாமில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் 63 முன்னணி தனியார் நிறுவனங்களும், பணி வாய்ப்பு வேண்டி 2122 இளைஞர்களும் கலந்து கொண்டனர். அவர்களில் 278 நபர்களுக்குப் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டதுடன், இரண்டாம் கட்ட நேர்காணலுக்கு 302 நபர்களும், திறன் பயிற்சிக்கு 24 நபர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ■

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

சுகாதார ஊக்குநர்களுக்கான இரண்டு நாள் புத்தாக்கப் பயிற்சி 2018 பிப்ரவரி 2 மற்றும் 3

தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதார ஊக்குநர்களுக்கு இரண்டு நாள் புத்தாக்கப் பயிற்சி கடந்த பிப்ரவரி 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது. தமிழ்நாட்டில் உள்ள ஊரக மாவட்டங்களிலிருந்து சிறப்பாகப் பணியாற்றி வரும் சுகாதார ஊக்குநர்களுக்கு இந்தப் பயிற்சியானது நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரண்டு சுகாதார ஊக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தத்தில் 64 சுகாதார ஊக்குநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சுகாதார ஊக்குநர்கள் தங்கள் களப்பணியின் மூலம் ஏற்படுத்தி வரும் மாற்றங்கள், அவற்றில் உள்ள சவால்கள், அதனை களைவதற்கான வழிகள் போன்ற விவரங்கள் குறித்து பயிற்சியில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

ஊக்குநர்கள் களப்பணியில் மேற்கொண்ட புதிய உத்திகள், அவர்கள் தங்கள் கிராமங் களினை எவ்வாறு திறந்தவெளி மலம் கழித்தலற்ற கிராமமாக உருவாக்கிய விதம் போன்றவை பகிர்ந்து கொள்ளப்பட்டது.

இந்தப் பயிற்சியின் ஒரு முக்கிய பகுதியாக, இருகுழி கழிப்பறை குறித்து விரிவான தகவல் பரிமாற்றம் நடைபெற்றது. பொது சுகாதார பொறியாளராக பணியாற்றி வரும் திருமதி. சாந்தி அவர்கள் இரு உறிஞ்சுக் குழி கழிப்பறை கட்டுமான தொழில் நுட்பம் குறித்து எளிய முறையில் பங்கேற்பாளர்களுக்கு விளக்கினார்.

மாவட்ட ஊக்குநர்களாகப் (ZSBP) பணியாற்றி வரும் சிலர் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டு, அவர்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து பகிர்ந்து கொண்டனர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரகத்தின் கூடுதல் இயக்குநர் திரு. லட்சுமிபதி அவர்கள் இப்பயிற்சியின் இறுதி நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றார். சுகாதார ஊக்குநர்கள் இந்தப் பயிற்சியின் மூலம் பயன் பெற்று, அதனை களப்பணியில் சிறந்த முறையில் ஈடுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் சுகாதார அணுகுமுறை ஊக்குநர்கள் மூலம் மேலும் வலுவடைந்துள்ளது என்பதையும் அவர் மேற்கோள் காட்டினார்.

பொது சுகாதார துறையின் மாவட்ட அளவிலான முதன்மை பயிற்றுநர்களுக்கு பயிற்சி

அனைத்து ஊரகப் பகுதிகளிலும் மக்கள் நோய் நொடிகள் அண்டாமல் சுகாதார மாய் வாழ வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம். சுகாதாரத்தின் முக்கிய அளவீடாக கழிப்பறை பயன்பாடு அமைகிறது. ஊரக வளர்ச்சித் துறையானது கிராமப்புறங்களில் சுகாதாரத்தை முழு அளவில் தந்திட முழு முனைப்புடன் செயல் பட்டு வருகின்றது

இந்நிலையில், துறை சார்ந்த ஒருங்கிணைப்பு இன்றியமையாததாக உள்ளது. சுகாதாரத்தை மேம்படுத்துவதில் ஊரக வளர்ச்சி மற்றும் பொது சுகாதாரத் துறைகள் இணைந்து பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கு வலு சேர்க்கும் வகையில் பொது சுகாதார துறையில் மாவட்ட அளவில் முதன்மை பயிற்றுநர்களை உருவாக்குவதென முடிவெடுக்கப்பட்டது. இந்த பயிற்சியானது இரண்டு தவணை களில் நடத்தத் திட்டமிடப்பட்டது. முதல் பயிற்சியானது கடந்த வருடம் ஜூலை மாதம் 20 மற்றும் 21ஆம் தேதிகளில் நடைபெற்றது.

இரண்டாம் கட்டப் பயிற்சி கடந்த பிப்ரவரி மாதம் 8 மற்றும் 9ஆம் தேதிகளில் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது. மாவட்ட பொது சுகாதாரத் துறை இணை இயக்குநரின் நேரடி உதவியாளர், ANM பயிற்சி பள்ளியின் ஆசிரியர்கள் ஆகியோருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சியின் துவக்க விழாவிற்கு பொது சூதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறையின் இயக்குநர் திரு. கே. குழந்தைசாமி அவர்கள் வருகை புரிந்தார். தனிப்பட்ட சுகாதாரம் முதல் ஒரு கிராமத்தில் முழு சுகாதாரம் வரை நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கழிப்பறைகளை கட்டி அதை உபயோகிப்பதன் மூலம் நோய்கள் தடுக்கப்பட்டு ஒட்டு மொத்த கிராமத்தையும் பாதுகாக்கப்படுகிறது என்பதை மேற்கோள் காட்டினார். ஊரக வளர்ச்சித் துறையின் தூய்மை பாரத இயக்கம் பெருமளவில் பொது சுகாதாரத் துறைக்கு நோய்களில்லாத கிராமங்களை உருவாக்க பயன்படுகின்றது என்பதை வலியுறுத்திக் கூறினார்.

பங்கேற்பாளர்களுக்கு பயனுள்ள வகையில் பயிற்சியாளர்கள் இந்தப் பயிற்சிக்கு அழைக்கப்பட்டனர். யூனிசெஃப் நிறுவனத்திலிருந்து Dr. ஜெகதீசன் அவர்கள், குழந்தைகளின் எதிர்காலம் சுகாதாரத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதை எடுத்துரைத்தார். SRM பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர். கீதா வேலையா சுகாதாரத்தில் மனமாற்றம் குறித்த தலைப்பில் வகுப்பெடுத்தார்.

பொது சுகாதாரத் துறை மற்றும் தடுப்பு மருந்து இயக்குநகரத்தின் மருத்துவ அலுவலர் டாக்டர். யோகானந்த் அவர்கள் பொது சுகாதாரம் மற்றும் உடல் நலம் என்ற தலைப்பில் பங்கேற்பாளர்களுடன் உரையாடினார்.

பொது சுகாதார நிறுவனத்தில் பொது சுகாதார பொறியாளராக பணியாற்றி வரும் திருமதி. சாந்தி அவர்கள் பாதுகாப்பான கழிப்பறை கட்டுமானம் மற்றும் அதன் தொழில் நுட்ப கூறுகள் குறித்த கலந்துரையாடல் மேற்கொண்டார்.

சென்னை கிங்ஸ் இன்டிடியூட்டின் ஒய்வு பெற்ற முதன்மை தண்ணீர் ஆய்வாளர் திரு. வடிவேலு அவர்கள் சுகாதாரம் மற்றும் தண்ணீர் சுத்தம் என்ற தலைப்பின் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. ஜெயக் குமார் அவர்கள் மாவட்ட அளவில் தூய்மை பாரத இயக்கத்தின் களப் பணிகளை எடுத்துரைத்தார். பின்பு, திண்டுக்கல் மாவட்ட SBM (G) ஒருங்கிணைப்பாளர் திரு. ராமநிதி அவர்கள் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்த விவரங்களை எடுத்துரைத்தார்.

இறுதியில் இந்தப் பயிற்சியில் பங்கு பெற்ற அனைத்து முதன்மை பயிற்றுனர்களும் தங்கள் மாவட்டங்களில் இதுபோன்ற பயிற்சி பட்டறையை நடத்த திட்டம் தீட்டினர்.

சர்வதேச மகளிர் தினம் – 2018

மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. பெண்கள் பல துறைகலும் அதிக பங்கேற்று, வரலாறு படைத்து வருகின்றனர். சுகாதார துறையிலும் பெண்கள் மேலோங்கி நிற்பதே இந்த ஆண்டிற்கான சிறப்பு. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பல இலட்சம் சுகாதார ஊக்குநர்கள் நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் அனைவரின் முழுமையான பங்கேற்பால் தூய்மை பாரதத் திட்டம் வலுவடைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாட்டில் அனைத்து ஊரக கிராம பகுதிகளிலும் பெண்கள் சுகாதார ஊக்குநர்களாக பங்கெடுத்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களில் இருந்து கொண்டு, சுகாதார ஊக்குநராய் களப்பணியில் இவர்கள் ஆற்றும் பங்கு தூய்மை பாரத இயக்கத்தின் பெரும் வெற்றியாகும்.

இவ்வாறு முழு முனைப்புடன் சுகாதார செய்திகளை கடைகோடி மக்களுக்கு எடுத்துச் செல்லும் சுகாதார ஊக்குநர்களை அங்கீகரிப்பதின் அவசியம் மேலோங்கியுள்ளது.

இதை நினவாக்க தமிழ்நாட்டிலிருந்து 7 சுகாதார ஊக்குநர்கள் மற்றும் இரண்டு மாவட்ட ஊக்குநர்கள் (ZSBP) ஆகியோரின் சிறப்பான பணியைப் பாராட்டி 'வெற்றி கேடயம்' வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வானது தலைமைச் செயலகத்தில் 09.03.2018 அன்று நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட 9 ஊக்குநர்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் பாராட்டி 'வெற்றிக் கேடயம்' வழங்கினார். இந்நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநகரத்தின் இயக்குநர் திரு. கே. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர் திரு. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர் திருமதி. சீதாலட்சுமி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

சர்வதேச மகளிர் தினம் 2018 அன்று பாராட்டுகள் பெற்ற வெற்றியாளர்களின் விவரங்கள் பின்வருமாறு.

செல்வி

சுமதி

ஹெலன்

ஈஸ்வரி

மீனாட்சி

சுமதி

சுபா

சுவாதி

தினம்... தினம்...

உலக சுகாதார தினம் - ஏப்ரல் 7

உலகில் உள்ள அனைவருக்கும் இயன்றவரை சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் உலக சுகாதார அமைப்பின் ஆதரவுடன் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 7ஆம் தேதி உலக சுகாதார நாள் கொண்டாடப்படுகின்றது. தொற்று நோய்களை எதிர்த்து போராடுதல் மற்றும் உலகில் உள்ள மக்களனைவருக்கும் பொதுச் சுகாதார வசதிகள் ஏற்படுத்துவதும் இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

இந்நிறுவனம், 1950ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் உலக சுகாதார நாளாகக் கொண்டாடுவதாகத் தீர்மானித்தது. அன்றிலிருந்து உலக சுகாதார அமைப்பின் சார்பாக சுகாதாரம் சம்பந்தமான கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் ஏப்ரல் 7ஆம் தேதியன்று கடைபிடிக்கப்படும் உலக சுகாதார தினத்தில் ஏதாவது ஒரு முக்கிய சுகாதார செய்தியை தலைப்பாய் முன்னிறுத்தி, அதைப்பற்றிய விழிப்புணர்வு செய்தியை, திட்டங்களை வெளியிடுவது உலக சுகாதார மையத்தின் கொள்கையாகும். ■

உலக மரபு தினம் - ஏப்ரல் 18

உலகின் மிக முக்கிய நினைவுச் சின்னங்களை பாதுகாக்க யுனெஸ்கோ உள்ளிட்ட அமைப்புகள் முயற்சி செய்து வருகின்றன. நினைவுச் சின்னங்களை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தான் உலக மரபு தினம் கடைபிடிக்கப்படுகிறது. மரபுச் சின்னங்களை உருவாக்கியதில் அறிவியலின் முக்கியத்துவம் மற்றும் மரபுச் சின்னங்கள் தொடர்பான படிப்புகளில் அறிவியலின் பங்கு ஆகியவை குறிப்பிடத்தக்கது. அறிவியலின்றி மரபுச் சின்னங்களே கிடையாது என்று கூறலாம். இந்தியாவில் தாஜ்மஹால், பதேபூர் சிக்ரி, குதுப்மினார் போன்றவை உலக பண்பாட்டு சின்னங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. ஆனால் மற்ற நாட்களில் உள்ள பண்பாட்டு சின்னங்களுடன் ஒப்பிடும்போதே இவற்றின் பராமரிப்பு மிகவும் குறைவாக உள்ளது. இவற்றில் பல இன்று அழியும் நிலையில் உள்ளன. பல நினைவுச் சின்னங்கள் சுற்றுச்சூழலை பாதிப்பு காரணமாக கடும் சேதத்தை சந்தித்துக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க பல்வேறு அமைப்புகளும், கலாசார ஆர்வலர்களும் நிதி உதவி செய்து வருகின்றனர். தற்போது பெரும் நிறுவனங்களும் இதற்கு முன்வந்துள்ளது பாராட்டத்தக்கது. ■

உலக பூமி தினம் - ஏப்ரல் 22

நாகரிக வளர்ச்சியால் வனங்கள், நீர் நிலைகள், விளைநிலங்கள் அழிப்பு, தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சுப்புகை, பாலிதீன், பிளாஸ்டிக் பொருட்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், உரங்கள், இரசாயனங்கள் போன்றவற்றால் நம்முடைய சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. இயற்கைக்கு எதிராக நாம் தெரிந்தே செய்யும் தவறால் ஆபத்தை சுமந்து கொண்டிருக்கிறோம். மாசில்லா பூமியை நம் சந்ததிக்கு விட்டுச் செல்ல, நாம் மேற்கொள்ள வேண்டிய பல செயல்கள் மேற்கொள்ள, நாம் வாழும் பூமியைக் காக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் 22ஆம் தேதி உலக பூமி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதுபோன்ற நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் மாசுபடுதலை தவிர்த்து, பூமி வெப்பமடைவதை குறைத்து, பூமியைக் காக்கலாம். மரங்களை வெட்டுவதைத் தடுத்து, காடுகளைப் பாதுகாக்க வேண்டும். விலங்குகளைக் கொல்லக் கூடாது. சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் காரணிகளை அறவே ஒழிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் விதமாக கொண்டாடப்படும் பூமி தினத்தில் நம்மைத் தாய்போல் பாதுகாக்கும் இந்தப் பூமி மாசுபடுவதை குறைத்து, சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் ஆர்வத்துடனும் விழிப்புடனும் செயல்படுவோம். ■

தூத்துக்குடி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மாடித் தோட்டம் பார்வையிடல்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள், தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தந்து, தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ள மாடித் தோட்டத்தைப் பார்வையிட்டு, மாடித் தோட்டம் குறித்த பயிற்சி பெற்ற பயனாளிகளுடன் கலந்துரையாடி, மாடித் தோட்டத்தை மேலும் மேம்படுத்திட ஆலோசனைகளை வழங்கினார். அதைத் தொடர்ந்து மாடித் தோட்டத்திற்கான மூங்கில் கூடைகள் தயாரிப்பு பயிற்சியினை பார்வையிட்டார்.

அதைத் தொடர்ந்து 02.03.2018 அன்று தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள், மாடித் தோட்டத்தின் மதிப்பீட்டு பணிக்காக வருகை தந்து, மாடித் தோட்ட மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சிகளின் போது தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விருப்பக் கண்காட்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, அரசு அருங்காட்சியகத்தில் 21.02.2018 முதல் 27.02.2018 வரை நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விருப்பக் கண்காட்சியினை, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. த. கெட்ஸி லீமா அமலினி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்க மேலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■



கூட்டமைப்பிற்கு பெருங்கடன்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 30.01.2018 அன்று நடைபெற்ற மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் தேவிகோடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ரூ. 1,70,00,000/–மும், நாகர்கோவில் நகராட்சி பகுதியில் செயல்படும் 9 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி நேரடிக் கடனாக ரூ. 78 இலட்சமும், ஊரக பகுதி யைச் சேர்ந்த 13 சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ. 7.50 இலட்சமும், தனிநபர் கடனாக ரூ. 50 ஆயிரம் வீதம் இரண்டு நபர்களுக்கு ரூ. 1 இலட்சமும் என மொத்தம் ரூ. 2,56,50,000/–த்தை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் சு. சுரேஷ், அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. மு. ஆறுமுகம், திருமதி. எம். கலைச்செல்வி, திரு. எம்.கே. பிச்சையப்பா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தொகுதி வழிநடத்துநர்கள் கலந்து கொண்டனர். ■

கல்லூரிச் சந்தை

திருவண்ணாமலை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், வந்தவாசி வட்டம், புதுப்பாளையம் இதயா கல்லூரியில் 06.02.2018 மற்றும் 07.02.2018 ஆகிய நாட்களிலும், ஆரணி, ஏ.சி.எஸ். கல்லூரியில் 08.02.2018 மற்றும் 09.02.2018 ஆகிய நாட்களிலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் கல்லூரிச் சந்தை நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி கல்லூரிச் சந்தைகளை துவக்கி வைத்து, சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், மாணவ மாணவிகள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■



இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளம் டி.என்.டி.டி.ஏ. ஆர்.எம்.பி. புலமாடன் செட்டியார் தேசிய மேல்நிலைப் பள்ளியில் தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுத் தரும் முகாம் 03.03.2018 அன்று நடைபெற்றது. தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி.ஜே. ரேவதி அவர்கள் தலைமை நடைபெற்ற இம்முகாமில் 850 இளைஞர்களும், 26 தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டனர்.

பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்ற 105க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு திருச்செந்தூர் ஆர்.டி.ஓ. தங்கவேல் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சாத்தான்குளம் ஒன்றிய ஆணையர் திரு. வேலுமயில், தலைமை ஆசிரியர் திரு. எட்வர்டு, மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு. சாமத்துரை, சாத்தான்குளம் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. வாவாஜி பக்கீர் முகைதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

நிதி உள்ளாக்கம் மற்றும் நிதிசார் கல்வி சம்பந்தமான பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், திருநெல்வேலி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மூலமாக வங்கியாளர்கள், வங்கித் தொடர்பாளர்கள் மற்றும் சமுதாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு நிதி உள்ளாக்கம் மற்றும் நிதி சார் கல்வி தொடர்பான ஒருநாள் பயிற்சி 16.02.2018 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் மாநில நிதி உள்ளாக்க உயர் ஆலோசகர் திரு. திருநாவுக்கரசு அவர்களும், தேசிய வளப் பயிற்றுநர் திரு. சுந்தர் அவர்களும் கலந்து கொண்டு, சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதில் வங்கியாளர்களின் பங்கு குறித்தும், வங்கியாளர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் மற்றும் வட்டி மானியத் திட்டம் தொடர்பான விளக்கம் அளித்தனர்.

இப்பயிற்சியில் திருநெல்வேலி மாவட்ட மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. த. கெட்ஸி லீமா அமலினி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்ட நிதிசார் கல்வி மைய பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர். ■

கோடைக்காலத்தை சமாளிக்க சில குறிப்புகள்...

கோடைக்காலம் வந்தாலே பல்வேறு உடல்நலக் குறைகள் ஏற்படும். உண்ணும் உணவு, அணியும் ஆடை, வசிக்கும் வீடு என அனைத்துமே கோடைக்காலத்தில் சிரமத்தை ஏற்படுத்தும். கோடைக்காலத்தில் நீர்ச்சத்து அதிக அளவில் தேவைப்படும். காய்கள் மற்றும் பழங்களில் நீர்ச்சத்து அதிகம் காணப்படுகிறது. காய்கறிகளையும், பழங்களையும் இந்த கோடையில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக உட்கொள்கிறோமோ அந்த அளவுக்கு நல்லது. கோடைகாலத்தில் சாப்பிடும் பழங்கள் மற்றும் காய்களின் விபரங்களை காணலாம்.

வெள்ளரி

வியர்வையின் மூலம் உடம்பிலிருந்து அதிகமாகத் தண்ணீர் வெளியேறும்போது உடம்பில் தாது உப்புகளின் சமநிலையைக் காக்க வெள்ளரி உதவுகிறது. வெள்ளரியின் தோலில் அதிகமாக உள்ள 'ஸ்டீரால்' கொழுப்பைக் கட்டுப்படுத்தக் கூடியது. எனவே வெள்ளரியைக் கழுவி விட்டு தோலைச் சீவாமலே சாப்பிடலாம்.

வெங்காயம்

கோடை வெயிலில் சிறிது தூரம் நடந்தாலே வியர்த்துக் கொட்டுவதுடன் உடலில் அரிப்பும் ஏற்படும். வெங்காயத்தை உணவில் அதிக அளவில் சேர்த்துக் கொண்டால் அதில் உள்ள 'குவர்சடின்' என்ற வேதிப் பொருள் உடல் அரிப்பைத் தடுக்கும்.

தர்ப்பூசணி

வெயில் நேரத்தில் சாதாரண தண்ணீருக்குப் பதிலாகத் துண்டு போடப்பட்ட, சாறு நிறைந்த தர்ப்பூசணியை சாப்பிடலாம். தண்ணீர்ச் சத்து நிறைந்த, கலோரி குறைந்த தர்ப்பூசணி, வெயில் காலத்தைச் சமாளிக்க ஏற்ற பழமாகும்.

தண்ணீர்

தண்ணீரின் தலையாய வேலையே வெப்பத்தை / வெப்பத் தாக்குதலை, தன்னுடன் உள்ள தாதுப் பொருட்களைக் கொண்டு தவறாமல் காப்பதுதான். தினசரி கோடையில் குறைந்தது 3-4 லிட்டர் வரை தண்ணீர் அருந்த வேண்டும். ஒரே நேரத்தில் நிறைய தண்ணீர் அருந்துவதற்குப் பதிலாக, சிறிது சிறிதாகத் தொடர்ந்து அருந்தலாம்.

வாழைப்பழம்

கோடைக் காலத்திற்கு ஏற்ற பழமாக வாழைப் பழத்தை சொல்வார்கள். வாழைப் பழத்தை சாப்பிட்டு வருவது கோடைக் காலத்தில் உடல் நலத்திற்கு ஏற்றது.

இளநீர்

கோடைக்காலத்தில் உப்புச் சத்து, நீர்ச்சத்து, இன்னபிற பொதுவான சத்துக்களும் உடலில் இருந்து வியர்வை மூலமாக வெளியேறி விடுவதால், மயக்கம், நாடித்துடிப்பு தளர்வு போன்றவை ஏற்படும். இளநீரில் இருக்கின்ற உப்புச் சத்து, நம் உடலில் வெப்ப நிலையை சமச்சீராகப் பாதுகாப்பதோடு மட்டுமின்றி, உடலின் வெப்பநிலையை உள்வாங்கி, வெப்பத்தை சரிவர வெளியே தள்ளுகிறது.

நுங்கு

நீர்ச்சத்து அதிகமாக இருக்கும் இள நுங்கு, வெயில்காலத்தில் ஏற்படும் வயிற்றுக் கோளாறுகளைப் போக்கும் அருமருந்தாகும். அல்சர், மூலம், குடற்புண் போன்ற வெப்ப நோய்களில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் நுங்கை சாப்பிட்டு வந்தால் மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

கோடைக்காலத்தில் சாப்பிடக் கூடிய உணவுகள்

நிறைய கீரைகள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை முடிந்தளவு உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம். கோடையில் சைவ உணவுகளே உகந்தது. அசைவ உணவாக இருப்பின், கடல் உணவுகள் விரைவில் செரித்து விடக் கூடிய தன்மை வாய்ந்தவை. குளிர்ச்சியான உணவுகளில் கீரைகளும், பழங்களும் முதல் இடத்தைப் பெறுகின்றன.

கோடைக்கு உகந்த உடைகள்

ஆள் பாதி, ஆடை பாதி என்பது போல, கோடை காலத்தில் அரைக்கை சட்டை பருத்தி சட்டை போன்றவைகளை அணிந்து கொள்ளலாம். பருத்தி ஆடைகளையும், உள்ளாடைகளையும் பயன்படுத்தலாம். பாலியஸ்டர், நைலான் போன்ற செயற்கை இழை ஆடைகளை தவிர்ப்பது சிறப்பு. கடும் கோடையில் வியர்வையை உறிஞ்சக் கூடிய பருத்தி ஆடைகளே மற்ற எல்லா ஆடை வகைகளையும் விட உகந்ததாகக் கருதப்படுகிறது.

தொகுப்பு – திருமதி. ஜெயந்தி கண்ணன், எம்,ஏ., எம்.எட்.,
முதுகலைப் பட்டதாரி ஆசிரியை,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, திருவஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

மாற்றுத் திறனாளியின் விடாமுயற்சி

புதுக்கோட்டை மாவட்டம், கவிநாடு கிழக்கு ஊராட்சியில் வசித்து வரும் திரு. பி. சந்திரசேகர் மாற்றுத் திறனாளியாக இருந்த காரணத்தினால் எந்த வேலைக்கும் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தார். அப்போது சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும், அக்குழுக்களின் மூலம் செயல்படுத்தும் தொழில் நடவடிக்கைகள் மூலம் வருவாய் ஈட்டும் விபரத்தினையும் தெரிந்து கொண்ட சந்திரசேகர், அப்பகுதியில் செயல் படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன், தனது மனைவியைக் கொண்டு சங்கவை மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவக்கினார்.

சங்கவை மகளிர் சுய உதவிக் குழு துவங்கி, முறையாகத் தர மதிப்பீடு செய்யப்பட்டு, வங்கியின் மூலம் ரூ. 1.20 இலட்சம் கடனாகப் பெறப்பட்டது. தனிநபர் கடனாக ரூ. 5 ஆயிரம் பெற்ற சந்திரசேகர், அந்தத் தொகையைக் கொண்டு தனது பகுதியில் பெட்டிக் கடை வைத்தார். இந்தக் கடையின் மூலம் தினசரி ரூ. 500/– வரை வருவாய் பெற்று வரும் சந்திரசேகர், தனது குடும்பத்தின் வறுமையை நீக்க வழிகாட்டிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

மகிழ்ச்சியில் மலர்ந்த வாழ்வு

தஞ்சாவூர் மாவட்டம், நீலகிரி ஊராட்சி, மானோஜிப்பட்டி குக்கிராமத்தில் வசித்து வருபவர் செல்வராணி (வயது 36). கணவரை இழந்த கைம்பெண்ணான இவருக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். இருவரையும் பள்ளிக்கூடம் அனுப்பக் கூட வசதியில்லாமல் வறுமையில் வாழ்ந்து வந்த செல்வராணி, இப்பகுதியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் வழிகாட்டுதலில் செயல் பட்டு வரும் பெஸ்ட் மகளிர் சுய உதவிக் குழுவில் இணைந்தார். குழுவில் தனிநபர் கடனாக ரூ. 10,000/. தனிநபர் கடன் பெற்ற செல்வராணி, அந்தத் தொகையைக் கொண்டு பூக்களை வாங்கி விற்பனை செய்து வருவதால் நாள் ஒன்றுக்கு ரூ. 200/– முதல் ரூ. 500/– வரை வருவாய் பெற்று வருகிறார். தனது வறுமையைப் போக்கி, தனது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி வரும் அளவிற்கு வருவாய் பெற்றிட வழிகாட்டிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தனது மனமார்ந்த நன்றியை செல்வராணி தெரிவிக்கிறார். ■

சுய தொழில் மூலம் கிடைத்த வாழ்வாதாரம்

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஒன்றியம், தாசநாயக்கன்பட்டி ஊராட்சி, சின்னபுரம் கிராமத்தில் வசித்து வருபவர் பச்சியம்மாள். இவரின் கணவர் இறந்து சில வருடங்கள் ஆகின்றன. கூலி வேலைக்குச் சென்று மிகவும் குறைவான வருவாய் பெற்று மிகவும் வறுமையான சூழலில் வசித்து வரும் பச்சியம்மாள், அப்பகுதி யில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் நலிவுற்றோர் தனிநபர் கடனாக ரூ. 5,000/– பெற்று, அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, சிறிய அளவிலான பலகாரக் கடை ஒன்றினை ஆரம்பித்தார். இக்கடையின் மூலம் மாதந்தோறும் கணிசமான அளவில் வருவாய் பெற்று வரும் பச்சியம்மாள், தனக்கு இந்த வருவாய் போதுமானதாக உள்ளது என்றும், தன்னுடைய வறுமையை போக்கிட உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

வாழ்வாதாரத்தால் மலர்ந்த வாழ்வு

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பசலை ஊராட்சியில் வசித்து வருபவர் திருமதி. வள்ளி (வயது 54). இவருக்கு இருதய நோய் காரணமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில் திடீரென கைகால்கள் இயங்காமல், பேச்சும் சரியான முறையில் வராத நிலை ஏற்பட்டதால், எவ்வித வேலைக்கும் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தார். இந்நிலையில் கீழப்பசலை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் 2016ஆம் ஆண்டு திருமதி. வள்ளிக்கு ரூ. 10,000/– தனிநபர் கடனாக வழங்கப்பட்டது. இப்பணத்தின் மூலம் நான்கு ஆடுகளை வாங்கியுள்ளார். கணவருக்கு கூலி வேலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டதால் இருவரும் ஆடுகளை மேய்த்து அதன் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவர்களின் பிள்ளைகளுக்கு திருமணம் ஆகி விட்டதால், கடந்த மூன்று ஆண்டுகளாக திருமதி வள்ளியும், அவரின் கணவரும் தனியாக வசித்து வருகின்றனர்.

ஆடு வளர்ப்பின் மூலம் கிடைக்கும் வருமானமே போதுமானதாக உள்ளது என்றும், தற்போது தங்களிடம் பத்து ஆடுகள் இருப்பதாகவும், வருடத்திற்கு மூன்று முதல் நான்கு ஆடுகள் வரை விற்பனை செய்வதாகவும் கூறும் திருமதி. வள்ளி, தங்களது வாழ்க்கையில் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி, வாழ்க்கை நடத்துவதற்கு ஆடு வளர்ப்பு தொழிலை உருவாக்கித் தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ■

சத்து நிறைந்த வெள்ளரி இட்லி

வெள்ளரிக்காயை உணவில் சேர்த்துக் கொள்வது உடலுக்கு மிகவும் நல்லது. வெள்ளரிக்காய் இட்லி செய்வது எப்படி என்பதை பார்க்கலாமா?

தேவையான பொருட்கள்

வெள்ளரிக்காய் – 250 கிராம், ரவை – 250 கிராம், தேங்காய் துருவல் – 3 தேக்கரண்டி, புளித்த தயிர் – 3 தேக்கரண்டி, பச்சை மிளகாய் – 4, உப்பு தேவையான அளவு

செய்முறை

பச்சை மிளகாயை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வெள்ளரிக்காயை தோல் நீக்கி துருவிக் கொள்ளவும். துருவிய வெள்ளரிக்காயுடன் ரவையை போட்டு கலந்து கொள்ளவும். பின்னர் அதனுடன் தேங்காய் துருவல், தயிர், பச்சை மிளகாய், உப்பு ஆகியவற்றை சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும். தேவைப்பட்டால் சிறிது நீர் ஊற்றவும். இந்தக் கலவையை அரைமணி நேரம் அப்படியே வைக்கவும்.

அடுப்பில் இட்லி பானையை வைத்து அதில் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும். அதன் பின்னர் இட்லி தட்டில் மாவை ஊற்றி 10 முதல் 15 நிமிடங்கள் வேக வைத்து எடுக்கவும். சத்தும் சுவையும் நிறைந்த வெள்ளரிக்காய் இட்லி ரெடி. இந்த இட்லியை சட்னி அல்லது சாம்பாருடன் சேர்த்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும். ■

கறிவேப்பிலை

நீரிழிவு நோயாளிகள் காலையில் 10 கறிவேப்பிலையையும், மாலையில் 10 இலையையும் பறித்த உடனேயே வாயில் போட்டு மென்று சாப்பிட்டு வந்தால், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு கட்டுப்படும். வெறும் வயிற்றில் தினமும் கறிவேப்பிலை இலையை மென்று சாப்பிட வேண்டும். இப்படியே 3 மாதங்கள் சாப்பிட்டு வந்தால் நீரிழிவால் உடல் பருமனாவது தவிர்க்கப்படும். சிறுநீரில் சர்க்கரை வெளியேறும் அளவும் குறைந்து விடும்.

கொழுப்பு சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடுவதால் இரத்த அழுத்தம், உடல் பருமன், உடல் சோர்வு போன்றவை ஏற்படுகின்றது. நாம் சாப்பிடும் எண்ணெயின் மூலம்தான் அதிக அளவு கொழுப்பு நம் உடலில் சேருகின்றது. ஒரு லிட்டர் எண்ணெயில் 10 கறிவேப்பிலையை போட்டு காய்ச்சி வடிகட்டினால் எண்ணெயில் உள்ள கொழுப்புச் சத்துக்கள் நீங்கிவிடும். ■

கொத்தமல்லியின் பயன்கள்

நாம் அன்றாட சமையலில் வாசனைக்காக பயன்படுத்தும் கொத்தமல்லி பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளது. கொத்தமல்லித் தழையை தனியாகவே துவையல், சட்னி போன்று செய்து சாப்பிட்டாலே அதிக அளவு பலன்கள் கிடைக்கும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி கொத்துமல்லி துவையல் செய்து சாப்பிடக் கொடுத்தால் பார்வைக் குறைபாடுகள் ஏற்படாது. கொத்தமல்லித் தழையுடன் தேங்காய் சேர்த்து துவையலாக செய்து சாப்பிட்டால் வாய்ப்புண், வயிற்றுப் புண், வயிற்று வலி போன்றவை குணமாகும்.

நம் உடலில் ஓடும் இரத்தத்தை சுத்திகரிப்பதில் கொத்துமல்லித் தழை பெரிதும் துணை புரிகிறது. நெய்யில் வதக்கிய கொத்துமல்லித் தழையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், உடல் வலிவும் பொலிவும் அடையும். மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் கொத்தமல்லித் தழையை உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் நாளடைவில் மாலைக்கண் நோய் சரியாகும்.

மலச்சிக்கல், உடம்பு வலி போன்றவற்றால் அவதிப்படுபவர்கள் கொத்தமல்லித் தழையுடன் வெற்றிலை சேர்த்து அரைத்து, நெல்லிக்காய் அளவு சாப்பிட்டால் பிரச்சனை தீரும்.

கொத்துமல்லித் தழையைப் போலவே கொத்துமல்லியும் (தனியா) பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளது. எனவே சிறியவர்முதல் பெரியவர் வரை அனைத்துத் தரப்பினரும் கொத்துமல்லி மற்றும் கொத்துமல்லித் தழை ஆகியவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வது அவர்களின் உடல் நலத்திற்கு மிகுந்த பயனைத் தரும். ■

முடிக்கு இயற்கை நிறம் கிடைக்க...

சிலர் தலைமுடி கருப்பாக இருக்க மருதாணி போடுவார்கள். இதனால் தலைமுடி செந்நிறமாக மாறும் வாய்ப்புள்ளது. பரவாயில்லை என்றால் மருதாணிப் பவுடரை வாங்கி, அதை புளி, வெந்தயம் போன்றவற்றை சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டிய தண்ணீரில் கலந்து, மறுநாள் அதில் எலுமிச்சம் சாறையும், தயிரையும் கலந்து தலையில் தடவலாம். இந்தக் கலவையை இரும்புச் சட்டியில் போட்டுக் கலந்தால் மிகுந்த பலனைத் தரும்.

நீங்கள் 35 வயதானவர் என்பதால் தரமான ஹெர்பல் டை வாங்கி தலைக்கு பூசி, அதன் மேல் ஹென்னா கலவையை தடவி, சிறிது நேரம் கழித்து தண்ணீரில் தலையை அலசினால், முடி இயற்கையான கறுப்பு நிறமாக மாறும். ■

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/–

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு 2018 பிப்ரவரி மாதம் முடிய நிர்ணயித்த இலக்கை எய்தி முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாவட்டங்கள்

1) தூத்துக்குடி மாவட்டம்
2) நாகப்பட்டினம் மாவட்டம்
3) தஞ்சாவூர் மாவட்டம்
4) திருநெல்வேலி மாவட்டம்
5) மதுரை மாவட்டம்

மேற்கண்ட மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். ■

– ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு வங்கி கடன் உதவி வழங்குதல்

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஒன்றியம், கரைசுத்து உவரி மற்றும் கரைசுத்து நவ்வலடி ஆகிய ஊராட்சியில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 12 மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு, 19.02.2018 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், ரூ. 28 இலட்சம் வங்கிக் கடன் உதவி வழங்கினார்.

இந்தக் கடன் உதவி மூலம் இப்பகுதியில் உள்ள மகளிர் தங்களின் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்வதற்கு ஏதுவாக தென்னங்கீற்று முடைதல், ஆடு வளர்த்தல் மற்றும் கறவை மாடு வளர்த்தல் போன்ற தொழில்களை தேர்வு செய்துள்ளனர். இந்த நிகழ்வின்போது மாவட்ட செயலாக்க அலுவலர் திரு. பர்னபாஸ்கரன், சமுதாய வளர்ச்சி அலுவலர் திரு. ஆபிரகாம் தனசிங், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர் திரு. மா. பேச்சிமுத்து ஆகியோர் உடன் இருந்தனர். ■

உலக மகளிர் தின விழா கொண்டாட்டம்

உலக மகளிர் தினம் கடந்த 08.03.2018 அன்று சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சென்னை அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. ■

சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சி

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்படும் 966 சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி 29.01.2018 முதல் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி வகுப்பில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் குறித்தும், திட்டத்தின் நோக்கங்கள், சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், ஊக்குநர்களின் பொறுப்பு, பிரதிநிதிகளின் பொறுப்பு, உறுப்பினர்களின் கடமைகள், குழு சேமிப்பு, வங்கிக் கணக்கு பராமரித்தல், பதிவேடுகள் பராமரிப்பு, உள்கடன் மற்றும் வெளிக்கடன், தலைமைத்துவம், தணிக்கை மற்றும் தணிக்கையின் வகைகள், தகவல் தொடர்பு, தன் சுத்தம் மற்றும் நோய்த் தடுப்பு முறை போன்றவை சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சியாக வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சியில் இதுநாள் வரை 4475 உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளனர்.

இப்பயிற்சியினை சிறப்பாக நடத்துவதை கண்காணிக்க வள ஆதார மையப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் மாவட்ட செயலாக்க அலுவலர் தலைமையில் குழு அமைத்து அனைத்துப் பயிற்சிகளும் சிறப்பாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மிகவும் ஆர்வத்துடன் இப்பயிற்சியில் கலந்து கொள்கின்றனர்.■

மாங்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை

நாகப்பட்டினம் மாவட்டம், திருப்பூண்டி கிழக்கு ஊராட்சியில் உள்ள காமேஸ்வரத்தில் மாங்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. அலுவலகக் கட்டிடம் மற்றும் கூடம் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

மேலும் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய திட்ட மேலாண்மை அலகின் நிதி மற்றும் நிர்வாக மேலாளர், நிறுவன வளர்ச்சி மேலாளர், நாகை கிராம விவசாயிகள் தயாரிப்பாளர் நிறுவனத்தைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள், திருமறைக்காடு கடலோர விவசாயிகள் கூட்டமைப்பு சங்க செயலாளர், மாங்கூழ் மேலாண்மை நிபுணர் திரு. வெங்கட் பட், மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தின் உறுப்பினர் மற்றும் இந்திய உணவுத் தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனத்தின் உறுப்பினர் ஆகியோர் கொண்டு மாங்கூழ் நிறுவனத்திற்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கான குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவினர் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய கடந்த மாதம் 15.02.2018 மற்றும் 16.02.2018 ஆகிய தேதிகளில் கிருஷ்ணகிரி மற்றும் பெங்களூரில் உள்ள இயந்திரம் தயார் செய்யும் நிறுவனங்களை பார்வையிட்டு, முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். ■

காப்பீடு தொடர்பான வெற்றிக் கதை

நாகப்பட்டினம் மாவட்டம், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் உள்ள வேட்டைக்காரனிருப்பு ஊராட்சியில் சொத்துக் காப்பீடு திட்டத்தின் கீழ் கணேசன், த/பெ. முருகையன், முருகானந்தம், த/பெ. வீரப்பன், ராஜ்குமார், த/பெ. சேவு ஆகிய பயனாளிகள் ரூ. 10/– வீதம் காப்பீடு செய்திருந்தனர். அண்மையில் ஏற்பட்ட இயற்கை இடர்பாட்டின் போது 3 பயனாளிகளின் வீடுகளும் மிகவும் பாதிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பயனாளிகள் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தை அணுகியதில், நபர் ஒருவருக்கு ரூ. 20,000/– வீதம் மூன்று நபர்களும் காப்பீட்டுத் தொகை பெற்று, பாதிப்படைந்த வீடுகளை சரி செய்தனர்.

இத்திட்டத்திற்கென பிரத்யோகமாக ஏற்படுத்தப்பட்ட காப்பீடு என்பதால் மிகவும் குறைந்த காப்பீட்டு கட்டணத் தொகை ரூ. 10/– மட்டும் செலுத்தி, ரூ. 20,000/– வரை காப்பீட்டுத் தொகை பெறப்பட்டு பயனடைந்ததைக் கண்டு மற்ற சுய உதவிக் குழு உறுப்பினர்களும் இக்காப்பீட்டில் இணைந்து பயன் பெற்று வருகின்றனர். ■

கூட்டுப் பொறுப்புக் குழுவின் வெற்றி தொழில்

புதுக்கோட்டை மாவட்டம், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் விச்சூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் கீழ் வன்னிச்சிப்பட்டினம் கிராமத்தின் ஆழ்துளை கிணறுக்கான களிமண் உருண்டை செய்யும் 5 மகளிரைக் கண்டறிந்து, கூட்டுப் பொறுப்புக் குழுவாக உருவாக்கி அவர்களுக்கு நாபின்ஸ் நிதி நிறுவனத்துடன் இணைத்து ரூபாய் இரண்டு இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

களிமண் உருண்டை உற்பத்தி தொழில் இந்தப் பகுதியில் மட்டுமே காணப்படும் ஒரு சிறப்பு தொழிலாகும். இங்குள்ள மகளிர் பலர் இத்தொழிலை சிறு அளவில் செய்து வந்ததில் அவர்களுக்கு இலாபம் குறைவாகவே இருந்தது.

தற்போது நமது திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்றபின் மொத்தமாக மண் வாங்கி உருண்டைகளை விற்பனை செய்வதினால் அதிக இலாபம் பெற்று வருகின்றனர்.

"திட்டத்தின் மூலம் குறைந்த வட்டியில் கடன் பெற்று, பெரிய அளவில் களிமண் உருண்டை உற்பத்தித் தொழிலை செய்து வருவதால் இலாபம் அதிக அளவில் கிடைத்து, கடன் தொகையில் ரூ. 50,000/– வரை திரும்ப செலுத் தியது மட்டுமின்றி, சேமிக்கும் பழக்கமும் உருவாகி உள்ளது. எனவே, இத் திட்டத்திற்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்' என பயனாளிகள் தெரிவித்தனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குதல்

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனுமந்தை மற்றும் கூனிமேடு கூட்டு வள மையங்களுக்கு உட்பட்ட எட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்லவன் கிராம வங்கி மூலம் குறைந்த வட்டியிலான கடன் தொகையான ரூ. 1,62,69,000/– கீழ்க்காணும் அட்டவணைப்படி வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்.	கூட்டமைப்பின் பெயர்	குழுக்களின் எண்ணிக்கை	வங்கி மூலம் வழங்கப்பட்ட தொகை (இலட்சத்தில்)	உறுப்பினர்கள் எண்ணிக்கை
1.	ஆலப்பாக்கம்	2	8,50,000	28
2.	பனிச்சமேடு	2	14,00,000	37
3.	செட்டிக்குப்பம்	6	37,82,000	281
4.	அனுமந்தை	17	60,28,000	96
5.	கூனிமேடு	2	12,50,000	26
6.	கீழ் புத்துப்பட்டு	3	13,72,000	54
7.	பொம்மையார்பாளையம்	4	15,87,000	68
	மொத்தம்	36	1,62,69,000	590

பெறப்பட்ட கடன் தொகை மூலம் விவசாயம் மற்றும் சிறு தொழில்கள் தொடங்கப்பட்டு, தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளதாக கடன் பெற்ற சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். ■

கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு கடன் வழங்குதல்

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 22.02.2018 அன்று முட்டம் வள ஆதார மையத்திற்குட்பட்ட சைமன் காலனி ஊராட்சியில் இந்தியன் வங்கி நிதியுதவியுடன் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு, வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் கீழ்க்காணும் விபரப்படி கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு தொழில் செய்ய தொழில்களுக்கான கடன் வழங்கப்பட்டது.

1.	வனம் கூட்டுப் பொறுப்புக் குழு	–	ஆர்கானிக் கடை	–	ரூ. 2,50,000/–
2.	கடல் சிப்பி கூட்டுப் பொறுப்புக் குழு	–	மீன் கடை	–	ரூ. 2,50,000/–
3.	சிநேகம் கூட்டுப் பொறுப்புக் குழு	–	ஜெராக்ஸ் கடை	–	ரூ. 2,50,000/–
4.	சுறா கூட்டுப் பொறுப்புக் குழு	–	பியூட்டி கடை	–	ரூ. 2,50,000/–
5.	ஆரஞ்ச் கூட்டுப் பொறுப்புக் குழு	–	துணி வியாபாரம்	–	ரூ. 2,50,000/–
6.	லூர்து அன்னை கூட்டுப் பொறுப்புக் குழு	–	துணி வியாபாரம்	–	ரூ. 2,50,000/–
7.	ஜீவன் கூட்டுப் பொறுப்புக் குழு	–	துணி வியாபாரம்	–	ரூ. 2,50,000/–

மேற்காணும் 7 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கும் மொத்தம் ரூ. 16,50,000/– கடனாக வழங்கப்பட்டு, பயனாளிகள் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விழாவில், திட்ட மேலாண்மை அலகின் முதுநிலை ஊரக நிதி மேலாளர், மாவட்ட செயலாக்க அலுவலர், இந்தியன் வங்கியின் குளச்சல் கிளை மேலாளர், நிதி ஆலோசகர், சமுதாய வளர்ச்சி அலுவலர், நிதி நிர்வாக அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர், வள ஆதார மைய பணியாளர்கள், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

மீன்பிடி உடமைகளுக்கான காப்பீட்டு முகாம்

திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மீனவர்களின் வாழ்வாதார உடமை களான படகுகளுக்கு காப்பீடு செய்ய 26 மீனவ கிராமங்களில் 13.02.2018 முதல் 15.02.2018 வரை மூன்று தினங்கள் முகாம்கள் நடத்தப்பட்டன.

மீன்பிடி உடமைகளுக்கான காப்பீட்டு முகாமில் சென்னை தலைமை அலவலகத்திலிருந்து மீன் வள ஆலோசகர் திரு. கெஜவர்தன், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் செயலாக்க அலுவலர் திரு. எஸ். விஜயன், திருவாரூர் மாவட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. ஜெயராஜ், தஞ்சாவூர் மாவட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. சின்னக்குப்பன், நாகை மாவட்ட மீனவர் சங்கங்களின் சம்மேளன முதன்மை நிர்வாகி திரு. கே. விஜய், மீன் விற்பனை சங்க ஒருங்கிணைப்பாளர் திரு. எம். சரவணன், மீனவர் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் மீனவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் காப்பீட்டிற்கு குறைந்த அளவு பிரீமியம், எளிய நடைமுறை, உடனடி காப்பீடு மற்றும் காப்பீடு செய்வதால் கிடைக்கக் கூடிய பலன்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும் மீன்பிடி உடமைகளுக்கு தொடர்ந்து காப்பீடு செய்யவும், ஒவ்வொரு ஆண்டும் அதனை புதுப்பிக்கவும், எதிர்பாராத விபத்து மற்றும் பாதிப்புகள் ஏற்படும் போது, இழப்பீட்டுத் தொகை பெறவும் மீனவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விழிப்புணர்வைத் தொடர்ந்து பதிவு செய்த அனைத்து படகு உரிமையாளர்களும் தங்கள் மீன்பிடி படகுகளுக்கும், உயிர் பாதுகாப்பிற்கும் காப்பீடு செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டு கூட்டம் இனிதே நிறைவடைந்தது. ■

மீன் விற்பனை சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு வாழ்வாதார மேம்பாடு

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த திட்டங்கள் பல செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடன் மீட்பு தொகை வழங்குதல், மீன்பிடி உபகரணங்களுக்கான காப்பீடு, பயனாளிகளின் பங்குத் தொகையுடன் கூடிய மீன்பிடி உபகரணங்கள் இலவசமாக வழங்குதல் போன்றவை அவற்றில் சில.

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதற்கட்டமாக சின்ன ஏர்வாடி, எஸ்.எம்.வலசை, பாரதி நகர், தாமோதரப்பட்டினம், சிங்கிவலைக்குச்சி மற்றும் எம்.வி.பட்டினம் ஆகிய ஆறு கடலோர கிராமங்களில் மீன் விற்பனை சங்கங்கள் துவங்கப்பட்டு, 450 மீனவர்களை அவற்றில் உறுப்பினராக ஒருங்கிணைத்து கடன் மீட்புத் தொகை ரூ. 83.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சங்கங்களின் உறுப்பினராக உள்ள மீனவர்கள், தங்கள் மீன்களுக்கு நியாயமான விலை பெற்று தரப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

எடுத்துக்காட்டாக மீன் விற்பனை சங்கங்கள் ஏற்படுத்தப்பட்ட பிறகு ஒரு கிலோ நண்டின் விலை ரூ. 270/– ஆக உயர்ந்துள்ளது. (பழைய விலை ரூ. 150/–) ■

தமிழ்நாடு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) தேசிய வள மையம் (NRO)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக வறுமை ஒழிப்பில் சிறப்பு செயல்பாடுகள் அடங்கிய புத்தக வெளியீடு மற்றும் தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தினை தேசிய வள மையமாக (NRO) தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் அங்கீகரிப்பு

புதுடெல்லியில் 06.02.2018 அன்று மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக நடைபெற்ற 'தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் கீழ் சமூக உள்ளடக்கம்' என்ற ஒருநாள் கருத்தரங்கில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலங்களின் ஆதார மையத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக "வறுமை ஒழிப்பில் சிறப்புச் செயல்பாடுகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் / முதியோர் வெற்றிக் கதைகளை" புத்தக வடிவில் தொகுத்து வெளியீடு செய்தனர்.

மேற்கண்ட நிகழ்வினைத் தொடர்ந்து 07.02.2018 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் "வறுமை ஒழிப்பில் சிறப்புச் செயல்பாடுகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் / முதியோர் வெற்றிக் கதைகள்" அடங்கிய புத்தகத்தை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள் முன்னிலையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட, கூடுதல் முதன்மை செயல் அலுவலர்கள் திரு. பா. செல்வராஜன் (ஒருங்கிணைப்பு), திரு. ஜா. சம்பத் (திறன் வளர்ப்பு) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், சென்னை, மத்திய ஊரக வளர்ச்சித் துறை சார்பாக தேசிய வள மையமாக (National Resource Organisation) ஆக அங்கீகரிக்கப்பட்டுள்ள செய்தியினை, அனைத்து மாநில அளவிலான அலுவலர்களுக்கும் தெரிவித்து, மேலும் தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையமானது, மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர், முதியோர் நலன், பண்ணை மற்றும் பண்ணை சாரா வாழ்வாதார தொழில்கள், நிறுவன ஒருங்கிணைப்பு, 2ஆம் கட்ட நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல் போன்ற முக்கிய திட்டங்களை செயல்படுத்தி, இதர மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு உறுதுணையாக இருந்து வலுப்படுத்திட வேண்டும் என தெளிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியினை தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், சென்னை ஏற்பாடு செய்திருந்தது. ■

மேற்கு வங்காள மாநிலத்தில் வாழ்வாதார மேம்பாட்டு பணி

TNVRC தேசிய வள மையத்தின் மூலம் மேற்கு வங்காள மாநிலத்துடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேற்கு வங்காள மாநிலம், உத்தர்தினேஜ்பூர் மாவட்டம், இஸ்லாம்பூர் ஒன்றியத்தில் பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்பட்டு செயல்படாமல் இருந்த சாலையோர உணவக விடுதியினை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆயிஷா ராணி, இ.ஆ.ப., அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், இஸ்லாம்பூர் நகரத்தின் அருகில் உள்ள 5 ஊராட்சிகளிலிருந்து 45 சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு சாலையோர உணவகத் தொழில் குழுவானது, தமிழ்நாடு தேசிய வள மையத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் 24 நாட்கள் உணவு தயாரித்தல் மற்றும் நிர்வாக மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட்டது.

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பங்குத் தொகையுடன் சாலையோர உணவகத்திற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் கொள்முதல் செய்து, 14.04.2017 அன்று உணவகம் துவங்கப்பட்டது. விடுதியில் உணவகம், கூட்ட அரங்கம் மற்றும் தங்கும் வசதி போன்ற அனைத்தையும் சுய உதவிக் குழு உறுப்பினர்களே மேலாண்மை செய்து, இதுவரை ரூ. 2,80,000/– இலாபமாக ஈட்டியுள்ளனர்.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் உணவகம் நடத்துவதால், பள்ளி குழந்தைகள் மற்றும் குடும்பங்களும் வந்து தரமான உணவை குறைவான விலையில் உண்டு மகிழ்கின்றனர். மேலும் அரசு மற்றும் பிற நிறுவனங்களின் சுப நிகழ்ச்சிகள், கருத்தரங்கம் மற்றும் கண்காட்சிகள் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்து அனைவரின் பாராட்டையும் பெற்று வருகின்றனர். ■

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079.
Published from (65,600 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN.

சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம்

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 2nd Week of the every month

முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்

முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்

உறுதிமொழி

தமிழையும், தமிழ் மண்ணையும் நேசிக்கும் நான்,

எனது கிராமத்தை தூய்மை கிராமமாகவும், நமது தமிழ்நாட்டை தூய்மை தமிழகமாகவும் மாற்றிட நான் என்றென்றும் முயற்சி செய்வேன்.

திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் நோய்கள், வருமான இழப்பு, மருத்துவச் செலவு, குழந்தைகளின் வளர்ச்சி பாதிப்பு, ஆகியவற்றை அனைத்து தரப்பினரிடமும் எடுத்துக் கூறுவேன்.

வீட்டுக்கு வீடு கழிப்பறை, மற்றும் கழிப்பறை பயன்பாட்டினை, அனைவரிடமும் வலியுறுத்திக் கூறுவேன்.

மனித மலம் கண்களுக்கு புலப்படும் வகையில் இருப்பதை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும், நகம் வெட்டும் பழக்கம், சோப்பினால் கைகழுவும் பழக்கத்தினை கற்பிப்பதுடன் நானும் மேற்கொள்வேன்.

பெண்களின் கௌரவத்தை காப்பதற்கும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்களின் நலன் காத்திடவும் கழிப்பறை அவசியம் என்பதை வலியுறுத்துவேன்.

எனது கிராமம், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராமமாக மாற்றிட, அனைத்து முயற்சிகளையும் செய்வேன்.

முழு சுகாதார தமிழகம், முன்னோடி தமிழகமாக மாற்றிட சீரிய முயற்சியில் நான் முழுமையாக என்னை அர்ப்பணிப்பேன் என உளமாற உறுதி கூறுகிறேன்.